# ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி

தேசிய தர மதிப்பீட்டுக் கழக மதிப்பீட்டில் "A" கிரேடு (மூன்றாம் சுற்று) அந்தஸ்து பெற்றது

ISO 9001 : 2015 தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

திருச்சிராப்பள்ளி- 02

# தமிழாய்வுத்துறை

## பாடக் கையேடு

### முதுகலை இரண்டாம் ஆண்டு - மூன்றாம் பருவம்

(II MA tamil - III Rd semester)

# <u>சித்தர் இலக்கியம்</u>

## P22TAE3A

# Elective course - III

# விருப்பப்பாடம் - III

# சித்தர் இலக்கியம்

**நோக்கம்:**

- சித்தர்களை அறிமுகம் செய்தல்
- சித்தர்கள் காட்டும் சமூக நல்லிணக்கத்தை இயம்புதல்
- சித்தர் பாடல்களில் காணலாகும் மருத்துவச் சிந்தனைகளை எடுத்துரைத்தல்
- சித்தாந்த தத்துவங்களைக் கற்பித்தல்
- சித்தர் கண்ட சமய நெறியை மொழிதல்

**அலகு** 1 - சித்தர் அறிமுகம் - பிரணவ மந்திரம்

**அலகு** 2 - பாம்பாட்டிச் சித்தர் - கடுவெளிச் சித்தர் பாடல்கள்

**அலகு** 3 - அகப்பேய்ச் சித்தர் - குதம்பைச் சித்தர் - திருமூலநாயனார் பாடல்கள்

**அலகு** 4- அகத்தியர், வால்மீகர் - அழுகுணிச் சித்தர் பாடல்கள்

**அலகு** 5 - சட்டை முனி - திருவள்ளுவர்- இராமதேவர் - கருவூர்ச் சித்தர்

**அலகு** 6 - தற்போதைய வரையறைகள்- அக மதிப்பீட்டிற்கு மட்டும்

**பாடநூல்கள்:**

1.பாரதிஜி. க- மகேஸ்வரி. மு, - வீ.செந்தில்குமார், 2021 சித்தர் இலக்கியம்:சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

2.தமிழ்ப்பிரியன், 2021,சித்தர் பாடல்கள் (மூலமும் உரையும்); சென்னை: கற்பகம் புத்தகாலயம்

**பார்வை நூல்கள்**

**1.**இராமநாதன் அரு 1986.ஞானக்கோவையென வழங்கும், சித்தர் பாடல்கள், சென்னை

2.வரதராஜன் ஜி, திருமந்திரம் விரிவுரை, I, II,III தொகுதிகள், சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.

**Course outcome**

- .சித்தாந்த தத்துவ நெறிகளை கற்றுணர்வர்
- சித்தாந்த பாடல்களில் காணலாகும் அறிவியல், இறை உணர்வுச் சிந்தனைகளை ஆய்ந்தறிவர்.
- அட்டமா சித்திகள் குறித்து கற்றறிவர்
- சித்தர்கள் கூறும் வாழ்வியலுக்கான நெறிமுறைகளை அறிந்து கொள்வர்
- சித்தர் பாடல்களில் இடம் பெற்றுள்ள இலக்கியச் சுவைகளைப் பகுத்தறிவர்.

**********


மகான் அகத்தியர்
மகான் கருவூரார்
மகான் திருமூலர்
மகான் சுந்தரானந்தர்
மகான் பாம்பாட்டி சித்தர்
மகான் சட்டைநாதர்
மகான் இராமதேவர்
மகான் அழுகண்ணர்
மகான் கோரக்கர்
சிததர்
இலக்கியம்
மகான் மச்சமுனி
மகான் கமலமுனி
ஓம் அகத்தியர் திருவடி போற்றி
மகான் புண்ணாக்கீசர்
மகான் இடைக்காடர்
மகான் குதம்பை சித்தர்
மகான் தேரையர்
மகான் புலிப்பாணி
மகான் காலங்கிநாதர்
மகான் போகர்



## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

## ஒரு மதிப்பெண் வினா

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்:

1, சித்தத்தை அடக்கியதன் மூலமாக அரிதினும் அரிய சித்துக்களைப் பெற்றவர்கள்

அ)அறிஞர்கள். ஆ) சித்தர்கள்

இ.)சிந்தனையாளர்கள். ஈ)மக்கள்

**விடை: சித்தர்கள்**

2. சித்தர்கள் பெற்ற சித்திகள் எத்தனை?

அ).8 ஆ).6 இ).5 ஈ)9

**விடை: அ) 8**

3. தஞ்சை சோழ மன்னன் முதலாம் ராஜராஜனின் குருவாக விளங்கியச் சித்தர் யார்?

அ)பாம்பாட்டிச் சித்தர் ஆ). திருமூலர்

இ)கருவூர்ச் சித்தர் ஈ). மௌனியம்

விடை: கருவூர்ச் சித்தர்

4.சித்தர்கள் எத்தனை பேர்

அ).97 ஆ.)60 இ.)18 ஈ) 20

**விடை:18**

5.திருவரங்கப் பெருமானைக் காணவேண்டி"அரங்கா அரங்கா" என்று வேண்டிய சித்தர்

அ.) அழுகுணிச் சித்தர் ஆ) சட்டை முனி

இ). அகப்பேய்ச் சித்தர். ஈ) குதம்பையார்

விடை:அழுகுணிச் சித்தர்

6 பண்டைய கல்வெட்டுகளில் சித்தி என்னும் சொல் எப்பொருளில் அமையும்

அ)பண்படுத்துவது ஆ)சீரமைப்பது

இ)உள்வாங்குவது ஈ)ஆக்கம்

விடை: பண்படுத்துவது

7.சித்தர் எனும் சொல் எந்த தெய்வத்தை குறிக்கும்

அ).சிவன் ஆ) பிரம்மா

இ)பெருமாள் ஈ)இந்திரன்

**விடை : சிவன்**

8.அட்டாங்க யோகம் என்பது

அ)எண் வகை சித்தி ஆ)அறுவகை சித்தி

இ)கரணயோகம் ஈ)தியானம்

விடை : எண்வகை சித்தி

9.உள்ளம் பெருங்கோயில் என்று எடுத்துரைத்தவர்

அ)அகத்தியர் ஆ)சிவவாக்கியர்

இ)திருமூலர் ஈ)பட்டினத்தார்

விடை : திருமூலர்

10. கடுவெளி என்பதன் பொருள் தருக

அ).பிரம்மம் ஆ).கணிப்பு

இ).பொல்லாங்கு ஈ)வெற்றி

விடை : பிரம்மம்

11. குதம்பை என்பதன் பொருள்

ஆ)காதணி ஆ) கழுத்த அணி

இ)ஆபரணம் ஈ) வளையல்

விடை : காதணி

12.பொன்னின் ஒலி போல பூரணமானவர்

அ)சிவபெருமான் ஆ)பிரம்மன்

இ) வள்ளல் ஈ)அரசன்

விடை: சிவபெருமான்

13) தமிழ் மூவாயிரம்-வேறு பெயர்

அ)நெடுந்தொகை ஆ)கீழ்க்கணக்குபட்டியல்

இ)திருமந்திரம் ஈ ) திருக்குறள்

**விடை : திருமந்திரம்**

14).மோட்சம் பெறுவதற்கு சூட்சமம் சொன்னவர்

அ) இடைக்காடர் ஆ)ராமதேவர்

இ)வால்மீகர் ஈ)அகத்தியர்

விடை : அகத்தியர்

15. வெட்டவெளியினை மெய்யென்று இருப்போர்

அ)சித்தர் ஆ )அரசன்

இ)கவிஞன் ஈ)நூலாசிரியர்

விடை : சித்தர்

16)உடம்பு ஏழிரண்டு வாயில அடி என்றவர்

அ)அகத்தியர் ஆ )அழுகணி சித்தர்

இ)பாம்பாட்டி சித்தர் ஈ)குதம்பைச் சித்தர்

விடை : அகத்தியர்

17. இறைவனை ஆதி மணி விளக்கு என்றவர்

அ)ராமதேவர் ஆ)இடைக்காடர்

இ)திருவள்ளுவர் ஈ)வால்மீகர்

விடை :இடைக்காடர்

18)ஒன்பதாம் திருமுறை பாடிய சித்தர்

அ) கருவூர்ச்சித்தர் ஆ)ராமதேவர்

இ)அழுகுணி சித்தர் ஈ)அகத்தியர்

விடை :கருவூர்ச்சித்தர்

19)மனத் தெளிவாகி நின்றவன் சித்தன் என்றவர்

அ)வான்மிகர் ஆ)கடுவெளி சித்தர்

இ)சட்டை முனி ஈ)ராமதேவர்

விடை :ராமதேவர்

20)இரு சுவாசம் காண்பவன் சிவசித்தன் என்றவர்

அ)அகத்தியர் ஆ)வால்மீகர்

இ)இடைக்காடர் ஈ)திருவள்ளுவர்

விடை :திருவள்ளுவர்

21)அழுகண்ணி என்பது

அ)கல்ப மூலிகை ஆ)தாவர மூலிகை

இ)சித்தர் மருத்துவம் ஈ)மருத்துவம்

விடை :கல்ப மூலிகை

22)பையூரில் இருந்து பாழூரில் பிறந்தேன் என்றவர்

அ)இடைக்காடர் ஆ)அழுகணி சித்தர்

இ)சட்டை மணி ஈ)வான்மீகர்

விடை :அழுகணி சித்தர்

23)பட்டணத்தை ஆளுகின்ற பஞ்சவர்கள்

அ)பஞ்சபூதம் ஆ)தத்துவ பூதம்

இ)சதுக்க பூதம் ஈ)பூதம்

விடை :பஞ்சபூதம்

24)ஐந்து எழுத்தை அம்பலமாக்கி ஐந்தெழுத்து என்பது

அ)நமச்சிவாய ஆ) நாராயணன்

இ)தத்துவம் ஈ)கண்ணம்மா

விடை : நமச்சிவாய

25.மெய்ப்பொருள் என்பது

அ)உண்மை பொருள் ஆ)உரை விளக்கம்

இ)பட்டயம் ஈ)வஞ்சகம்

விடை :உண்மை பொருள்

26)காணாமல் கண்டு கருத்தோடு இருப்போர்

அ)குதம்பை சித்தர் ஆ)கடுவெளி சித்தர்

இ)பாம்பாட்டி சித்தர் ஈ)சட்டை முனி

விடை :குதம்பை சித்தர்

27.முப்பொருளும் தானாகி நின்றவர்

அ)சிவபெருமான் ஆ)பிரம்மன்

இ) திருமால் ஈ) சித்தர்கள்

விடை : சித்தர்கள்

28)பரப்பிரம்மம் காட்சி எது

அ)காணல் ஆ)கேட்டல்

இ)உண்ணல் ஈ) இருத்தல்

விடை :காணல்

29)அறிந்தது தற்ப்பரம் என்றவர்

அ)திருமூலர் ஆ) கருவூரார்

இ)இடைக்காடர் ஈ)சட்டை முனி

விடை :இடைக்காடர்

30)இறைவனை ரவிமதியாய் நின்ற ரூபம் என்றவர்

அ)வால்மீகர் ஆ)அழுகணி சித்தர்

இ)சட்டை முனி ஈ)ராமதேவர்

விடை :

31) பாம்பாட்டி சித்தர் ஜீவசமாதி அமைந்துள்ள இடம்

அ)காஞ்சிபுரம் ஆ)திருவண்ணாமலை

இ)திருவரங்கம் ஈ)மருதமலை

விடை : மருதமலை

32.அகாரம் என்பது யாரைக் குறிக்கும்?

அ)திருமால் ஆ)பிரணவம்

இ)சிவன் ஈ.)நான்முகன்

விடை: சிவன்

33."**செகமெல்லாம் சிவமென்றல் அறிந்தோன்**"

அ)தலைவன் ஆ)தமையன்

இ)சித்தன் ஈ)கொடையன்

விடை: இ. சித்தன்

34.உடலினை "**ஊற்றைச் சடலமடி** " என்று குறிப்பிட்டவர்

அ)அகத்தியர் ஆ)அழுகுணிச் சித்தர்

இ)இடைக்காடர் ஈ) திருமூலர்

விடை :அழுகுணிச் சித்தர்

35.'கண்ணம்மா' என்று விளித்துப் பாடியவர்–

அ)அழுகணிச் சித்தர் ஆ)சிவசித்தர்

இ.சிவன் ஈ.பாம்பாட்டி சித்தர்

விடை : அழுகுணிச் சித்தர்

36.மனமது செம்மையானால் எதனைக் கூற வேண்டாம்? '

அ)மந்திரம் ஆ)தந்திரம்

இ)தாலாட்டு ஈ)வேதம்

விடை:மந்திரம்

36. கடுவெளிச் சித்தர் பாடல்கள் எந்த வகையை சேர்ந்தவை

அ)ஆனந்தக் களிப்பு ஆ)நீலாம்பரி

இ)சுத்த தன்யாசி ஈ)ஆரோகணம்

விடை: ஆனந்தக் களிப்பு

37.பாவம் செய்யாதிரு மனமே என்றவர்

அ)கடுவெளி சித்தர் ஆ)பாம்பாட்டி சித்தர்

இ)வால்மீகர்ஈ. ஈ)வள்ளுவர்

விடை : கடுவெளி சித்தர்

38. கடவுளை கண்டு தெளிந்தவன்

அ) ஞானி ஆ)அரசன்

இ)சித்தன் ஈ)சிவயோகி

விடை : சித்தன்

39 தெளிவதற்கு சூட்சமம் சொன்னவர்

அ)கரூவூர் சித்தர் ஆ)இடைக்காடர்

இ)பாம்பாட்டி சித்தர் ஈ)போகர்

**விடை:கருவூர்ச் சித்தர்**

******************



# இரண்டு மதிப்பெண் வினாக்கள்

**1. குண்டலினி யோகத்தை குறிப்பிட்ட சித்தர் யார்?**

பாம்பாட்டி சித்தர்

**2. "நீடுபதம்" என்று சொல்லின் பொருள் தருக:**

நீண்ட திருவடி

**3. சித்தன் பொருள் விளக்கம் தருக :**

சித்தி என்ற சொல் மெய் அறிதல் நிலையை குறிக்கும். கடவுளைக் காண முயன்றவன் பக்தன், கண்டு தெளிந்தவன் சித்தன்.

**4. சித்தர்களின் அளப்பரிய ஆற்றலாக பாம்பாட்டி சித்தர் குறிப்பிடுவது யாது?**

துணைச் சிறு துரும்பாக்குவோம் துரும்பைத் தூணாக்குவோம் ,அக்கினிக்குள் மூழ்கி வருவோம், முந்நீருள் மூச்சடக்குவோம்.

**5. "அகத்தினை அத்தன் பால் வைத்தோர் அழியார்"- இக்கூற்று யாருடையது?**

பாம்பாட்டிச் சித்தர்

**6. தசநாடிகள் என்பவை யாவை?**

இடகலை, பிங்கலை ,கழுமுனை, சிகுவை, புருடன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தத்தன், தனஞ்ஜெயன்

**7. "நீர் மேல் குமிழியில் காயம் "--யார் கூற்று?**

கடுவெளி சித்தர்

**8. நிலையாமையை கடுவெளி சித்தர் எவ்வாறெல்லாம் உருவகப்படுத்துகிறார்?**

ஐந்து பேர் சூழ்ந்திடும் காடு ,கள்ளப்புலன் எனும் காடு, புழுக்கூடு

**9. "புளியம் பழத்தின் ஓடு போலவே சுற்றுத் திருந்தாலும்" பொருள் விளக்குக:**

புளியம்பழமும் ஓடும் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருப்பது போல, சுற்றத்தினருடன் உறவாட வேண்டும் என்பதாகும்.

**10. கோபத்தை எதற்கு உவமையாக சித்தர்கள் குறிப்பிடுகிறார்கள்?**
கோபம் எனும் மதயானை என்கிறார்கள் .அதனை அடக்குகின்ற கூர்மையான அங்குசம் புத்தி எனவும், இவ்வாறு கோபத்தை அடக்கி ஆள்வதால் சிற்சொருபாகிய இறைவனை அடையலாம் என உணர்த்துகிறார்கள்.

**11. "நியமேசர்" என்ற தவப்பெயர் கொண்ட சித்தர் யார்?**

அகப்பேய்ச் சித்தர்

**12. தன்னை அறிவதே யோகத்தின் முதல் நிலை என்று உணர்த்தியவர் யார்?**

அகப்பேய்ச் சித்தர்

**13. சிவாகம பாதங்கள் யாவை?**

சரியை, கிரியை, யோகம், ஞானம்

**14. "குதம்பைச் சித்தர்" பெயர் காரணம் தருக:**

பெற்றோர்கள் இவர் குழந்தையாக இருந்த வேளையில் குதம்பை என்னும் அணிகலனை அணிவித்த குதம்பாய் என்று அழைக்க

துவங்கியதால் இவர்தம் பாடல்களில் குதம்பாய் என்ற பதம் இறுதியாக அமையும் இதனால் இவர் குதம்பை சித்தர் என வழங்கப்படுகின்றார்.

**15." மூலாதாரம்" "அநாதகம்"--- விளக்கம் தருக:**

மூலாதாரம் முக்கோண வடிவம் உடையது அநாதகம் அறுகோணச் சக்கரம் உடையது.

**16. அட்டாங்க யோகம் என்பவை யாவை ?**

அட்டம் ---8 யோகங்களின் எட்டு நிலைகளை குறிக்கும் .அவையாவன இயமம் ,நியமம் ,ஆசனம், பிராணாயாமம் ,பிரத்தியாகரம், தாரணை ,தியானம் சமாதி.

**17. "செத்தாரைப் போல திரி" என்று கூறியவர் யார் ?**

குதம்பைச் சித்தர்

**18. "தமிழ் மூவாயிரம்" என வழங்கப்படும் நூல் எது?**

திருமந்திரம்

**19. திருமூல நாயனார் சமாதியான இடம் எது ?**

சிதம்பரம் .

**20. 'சிற்பரம்' பொருள் தருக :**

சிவமாகிய பிரம்மம்

**21. இறைவனின் சிறப்புகளை திருமூல நாயனார் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?**

குருவும் சிவனும் ஒருவரே, பேசாத மந்திரமும் பேரொளியின் வடிவமும் சிவமே என்று கூறுகிறார்.

**22. பரம ஞானி என்று அகத்தியர் யாரைக் கூறுகிறார் ?**

சக்தியும் சிவனும் ஒன்றாகி உடலுக்குள்ளே இருப்பதை உணர்ந்து பக்தியால் உள்ளம் ஒடுங்கி இறை நாட்டத்துடனே இருப்பவர்கள் பரம ஞானிகள்.

**23. 'காயகற்பம்' விளக்கம் தருக**

கற்பம் -மருந்து

காயம் -உடல் நமது உடலைக் காப்பதற்கு சித்தர்கள் கண்டருளிய மருந்து காயகற்பம் என்பதாகும் இது உடலை வலிமையாக்கும். நோய்கள் வராமல் தடுக்கும்.

**24. வால்மீகர் இறைவனை வழிபட்ட முறையினை விளக்குக ?**

சூத்திர ஞானம் கொண்டு இறைவனை வழிபட்டார் இறைவன் அருவருவாய் எங்கும் நிறைந்து விளங்குகின்ற தன்மையை உணர்ந்து வழிபட்டார்.

**25. அழுகணிச் சித்தர் பெயர்க் காரணம் தருக:**

அழுகண்ணி என்பது ஓர் அரிய கல்ப மூலிகை இதைப் பயன்படுத்தி காய சித்தி கைவரப்பெற்றதால் அழுகணிச் சித்தர் என அழைக்கப்பட்டார்.

**26. 'தனலாய் வளர்ந்த கம்பம்' பொருள் விளக்கம் தருக:**

இடகலை பிங்கலை எனும் இரண்டு நாடிகளுக்கும் இடையே ஒடுங்கி வளர்ந்திருக்கின்ற முதுகெலும்பினை தனலாய் வளர்ந்த கம்பம் என்கிறார்.

**27. பையூர், பாழூர் ,மெய்யூர், விளக்குக:**

பையூர்- கருவறை பாழூர்-- வாழுகின்ற ஊர் மெய்யூர்- அண்டவெளி

**28. தத்துவங்களின் பிரிவை அழுகுணி சித்தர் எவ்வாறு வகைப்படுத்துகிறார்**?

மொத்த தத்துவங்கள்-96 அவையாவன, முதல் தத்துவம்--30 இரண்டாம் தத்துவம் -30மூன்றாம் தத்துவம்-36

**29. சிவனை தாண்டவக்கோன் என்று குறிப்பிட்டவர் யார்?**

இடைக்காட்டுச் சித்தர் இவர் நவநாத சித்தர்களில் ஒருவர் .ஞான உபதேசம் பெற்றவர். திருவண்ணாமலையில் ஜீவசமாதி அடைந்தார்.

**30. சட்டைமுனி இயற்றிய நூல்கள் சிலவற்றை குறிப்பிடுக**

சட்டை முனி கல்பம், சட்டை முனி வாதநிகண்டு, நவரத்தின வைப்பு திரி காண்டம், சரக்கு வைப்பு ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

*********



# ஐந்து மதிப்பெண் வினாக்கள்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

**1. சித்து என்றால் என்ன? சித்தர்கள் யார்? பெயர் காரணம் தருக:**

சித்தி என்பது அதி அற்புதமான ஆற்றல் -----கடவுளை காண முயன்றவன் பக்தன் -------கண்டு தெளிந்தவன் சித்தன் தன் சுய முயற்சியால் பூரணத்தை அடைய சுய சோதனை செய்யும் யோகியே சித்தன் துய்யநெறி காட்டி நின்றார் சித்தர் சித்தர் -----நூல்நெறி காட்டுகிறார் எத்தர் எத்தர் எழும்பாமல் வாசனையை கொன்றோம் ஞானி ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்

**2. சித்தர்களின் கொள்கைகளை விளக்குக**

இறைவன் ஒருவனே அவர் சிவபெருமான் அவரை கூட முதற்சித்தன் என்ற அளவிலேயே வணங்கினார்கள் உருவ வழிபாடுகளை வன்மையாக எதிர்த்தவர்கள் சாதி சமய ஏற்றத்தாழ்வை எதிர்த்தவர்கள்---- இறைவனை தம் உடலுக்குள்ளேயே கண்டு வணங்கியவர்கள் ----மனத்தை தூய்மையாக வைத்திருந்தால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்று கூறியவர்கள்--- சிறு தெய்வ வணக்கத்தை கண்டித்தவர்கள்

**3. எண் பெரும் சித்திகளை விளக்குக**

உலகினில் உயர்ந்தது வீடு பெயர் எட்டும் இரண்டையும் சேர்த்து மறையெல்லாம் உனக்குள்ளே ஏகமாய் தேர்ந்து வைதோரைக் கூட வையாதே இந்த வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே வைய வினைகள் செய்யாதே அணிமா துவங்கி வசித்துவம் வரை அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்

**4. ஓம் எனும் பிரணவ மந்திரச் சிறப்பினை விளக்குக ?**

ஓம் எனும் மந்திரம் நம் மூலாதாரத்தில் இருந்து ஒலிக்கத் துவங்குகிறது. அதன் ஒலிப்புத் தன்மை காரணமாக நம்முடைய உடலுக்குள் பல்வேறான சக்திகளை மீட்டெடுக்கிறது மீண்டும் மீண்டும் கூறும் பொழுது உடலுக்குத் தேவையான சக்திகளை கொடுக்கிறது.

**5.பாம்பாட்டி சித்தர் வரலாறு எழுதுக**

இறைவனின் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையினை பாடியவர் தனது யோக பயிற்சியினால் மூலாதாரமாகிய பாம்பினை குறிப்பிட்டு அதனை மேலே ஏற்றும் குண்டலினி குறித்து பாடியதால் இவர் பாம்பாட்டி சித்தர் என அழைக்கப்பட்டார் சட்டை முனியின் சீடர் மருதமலையில் தவம் இருந்தவர் ----அங்குள்ள குகைக்கு பாம்பாட்டி சித்தர் குகை என்ற பெயர் உள்ளது. "சுத்தமுடன் பாம்பினது விஷத்தை வாங்கி துப்புரவாய் அருந்துகிறவனே" என்ற போகர் பாடல் பாம்பாட்டி சித்தரின் சிறப்பினை விளக்கும்

**6. கடுவெளி என்பது என்ன? அக்குறியீடு எவ்வாறு ஒரு சித்தர் பெயராய் மாறியது?**

பரந்த வெற்றிடத்தையே தியானம் செய்து சித்தர் ஆனவர் என்பதால் கடுவெளி சித்தர் எனப்பட்டார், பாவம் செய்யாதிரு மனமே என்று எச்சரித்தவர் நீர்மேல் குமிழிகள் காயம் இது நில்லாது போய்விடும் நீ அறி மாயம் என்ற பாடல்கள் இவரின் எளிமை தன்மையை புலப்படுத்தும் மெய்ஞ்ஞானமே இறைவன் உணர்ந்து விட்டால் நமக்கு துறவறம் என்பது இறை நெறியின் முதற்படி என்பது விளங்கும் என உணர்த்தியவர்.

**7. திருமூல நாயனார் யார்? அவர் இயற்றிய இலக்கியம் எது?**

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம்திருமுறையாக திகழும் திருமந்திரத்தை இயற்றியவர்--- இச்சிறு மூலர் ஞான மார்க்கமாக இறைவனை வழிபட்டவர் திருமந்திரம் தவிர பல நூல்களையும் இயற்றியுள்ளார்

9. **அஞ்சு பஞ்சபூதம் அறிந்தால் அணித்தியம் என்ற கோட்பாட்டை திருவள்ளுவ நாயனார் எவ்வாறு எடுத்துரைக்கிறார்**?

அஞ்சு பஞ்சபூதம் அறிந்தால் அனித்தியம் போம் அஞ்சு வசப்படுவது ஆண்டதனில் கண்டறிவோர் ஞானக் காட்சி என்ற பாடல் வழி உலக நிலையாமையை விளக்குகிறார்" இந்த உடல் காயம் இறந்துவிடும் அற்ப குழியில் அரவம் இருப்பதினும் கற்பகத்தை ஆண்டிடுமோ காண்" போன்ற பாடல்கள் வழியில் சித்தர்களின் கொள்கையை நிலை நிறுத்தியவர்

10. **சித்தர்களின் தோற்றமும் மேன்மையும் குறித்து விளக்கு**?

சிந்தை தெளிந்திருப்பான் அவனே சித்தன் ஆத்தாளை பூசித்தோம் அவனே சித்தன் சித்தி என்ற சொல் மெய் அறிதல் வெற்றி காரியம் கைகூடல் மோட்சம் போன்ற பல பொருள் சித்தர்கள் என்போர் உண்மை நிலையை அறிந்தவர்கள் இறைவனின் வடிவினனாக இருந்தவர்கள் எனவே இறைவனை வெளியே தேடாமல், தியானம் யோகம் மூலம் தங்கள் உடலுக்குள்ளேயே கண்டு வணங்கியவர்கள்.

********



# பத்து மதிப்பெண் வினாக்கள்

## பத்து மதிப்பெண் வினாக்கள்::

1.சித்தர்களின் பிரணவ மந்திரம் குறித்து விளக்குக ;

2.சித்தர்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் விளக்கம் தருக ?

3.சித்த மருத்துவம்-இன்றைய மருத்துவம் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்க :

4பாம்பாட்டிச் சித்தரின் பாடுபொருளை விளக்குக :

5.சித்தர்களின் அட்டாங்க யோகம் குறித்து எழுதுக:

6. சித்தர்களின் உடல் ஓம்பும் முறை குறித்து கட்டுரைக்க. 7.சித்தர்களின் ஆன்ம தத்துவம் குறித்து விளக்கி வரைக: 8.கடுவெளிச் சித்தரின் பாடல் கருத்துக்களை தொகுத்து எழுது

9. சித்தர் பாடல்கள் வழி நிலையாமையை விளக்கி உரைக்க :

10.”மெய்ஞானமே வீடுபேறு”–இக்கூற்றை சித்தர் பாடல்கள் வழி நிறுவுக

11.சித்தர்கள் சமூக நல்லிணக்கம் பேணியவர்கள் என்று நிறுவுக

12.மன நோய்க்கும் உடல் நோய்க்கும் சித்தர்கள் எவ்வாறு மருந்தடித்தார்கள் என்பதை நும் பாடப்பகுதி சித்தர் பாடல்கள் மூலம் விளக்குக

13.சித்தர்களின் சமய தத்துவ நெறிகளை விரித்துரைக்க. 14.பாம்பாட்டி சித்தர் மற்றும் அகப்பேய்ச் சித்தரின் பாடல்களையும் தொகுத்து எழுது

15.கரூவூர் சித்தர் அவரது தனி சிறப்புக்கள்விளக்கி வரைக :

*********



# சித்தர்கள் ஜீவசமாதி அடைந்த இடம்

## <u>சித்தர்களும் அவர்கள் ஜீவசமாதிரியான இடங்களும் ::</u>

1.பாம்பாட்டி சித்தர் -மருதமலை

2.கடுவெளி சித்தர் ---காஞ்சிபுரம்

3அகப்பேய்ச் சித்தர் ---திருவையாறு

4.குதம்பை சித்தர் - கும்பகோணம்

5.திருமூல நாயனார் - சிதம்பரம்

6.அகத்தியர் - திருவனந்தபுரம்

7.வால்மீகர் - எட்டுக்குடி

8அழுகணி சித்தர் - நாகப்பட்டினம்

9.சட்டை முனி -சீர்காழி ஸ்ரீரங்கம்

10.திருவள்ளுவர் -

11.ராமதேவர்- நாகப்பட்டினம்

12. கருவூரார்- கரூர்

*******



## பாட நூல்களும் பார்வை நூல்களும்

# பாடநூல்கள்:







# பார்வை நூல்கள்










